# தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா: திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



திண்டுக்கல் மாவட்ட கழகத்தின் சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல்லில் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் மாளிகை முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் இ பெ செந்தில்குமார் தலைமையில் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். நிகழ்ச்சியில் அவைத் தலைவர் வக்கீல் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், மார்க்கெட் மேரி பிலால் உசேன், மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநகரச் செயலாளர் ராஜப்பா மற்றும் கழக நிர்வாகிகள் திரளான மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து, முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை அமைக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் அய்யன் திருவள்ளுவர் சிலை முன்பு வைத்து ரெ.மகேஷ் சுற்றுலா பயணிகளுக்கு 102 வள்ளுவர் சிலைகளை வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் என்.தில்லைசெல்வம், என்.சுரேஷ்ராஜன், வி.ஜோசப் ராஜ், எ.பாபு வினிபிரட், எப்.எம்.இராஜரெத்தினம், ஐ.கேட்சன், ப.ஆனந்த், எம். சிவராஜ் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை யில் முத்தமிழறிஞர் கலைஞரின்102வது பிறந்த நாளை முன்னிட்டு முன்னாள் எம்.எல்.ஏ. நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு நகர் கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் தலைமையேற்று கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுக் குழு உறுப்பினர் பி.டி.ஆர்.முத்து மற்றும் நகர் கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார் சேட் தலைமையில் கழக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.





சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் கிழக்கு, மேற்கு ஒன்றியக் கழகங்கள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளையொட்டி ஒன்றியச் செயலாளர் வசந்தி சேங்கை மாறன் தலைமையில் பேரூராட்சி மன்றத் தலைவர் த. சேங்கை மாறன் முன்னிலையில் ஆ. தமிழரசி எம்.எல்.ஏ. 500க்கும் மேற்பட்டோருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கினார். உடன் ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்னர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் முத்தமிழறிஞரின் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு ஆ. தமிழரசி எம்.எல்.ஏ. மாவட்டத் துணைச் செயலாளர் த. சேங்கை மாறன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் முத்தமிழிறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு மாநில கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை எம். பரமன் ஏற்பாட்டில் மதுரை மாநகர் மாவட்ட கழக அவைத்தலைவர் ஒச்சு பாலு தலைமையில், வட்ட கழக செயலாளர்கள், ஆட்டோ சுரேஷ், சீனி ரமேஷ், துரை மணி ஆகியோர் முன்னிலையில் மதுரை மாநகர மாவட்ட கழக துணை செயலாளர் சின்னம்மாள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதிகள் உதயா கதிரவன், பாண்டி, ரமேஷ், விருமாண்டி, சேட் சிவா, தேவி மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஒன்றிய மேல வெள்ளூர் கிராமத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் ஏ.ஆர்.கே. தேவதாஸ் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில், அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி மரியாதை செலுத்தினார். உடன் கிளைக் கழக செயலாளர் வீரணன் பிரதிநிதி அக்கினிராஜ் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பஞ்சாட்சரம் ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் சேங்கைசாமி மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.